# சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் அறங்கள்

## Silappathikaram Shows Biological Tampars

**G. மங்கையர்க்கரசி**,
ஆய்வாளர்,
கொங்கு கலை அறிவியல் கல்லூரி,
கரூர்-6.

**முனைவர். மா. சண்முகம்**,
ஆய்வு நெறியாளர்,
தமிழ்த்துறை,
கொங்கு கலை அறிவியல் கல்லூரி,
கரூர் -6.

**ABSTRACT**

Silappathikaram an epic poetry was written by elankoadikal, silambu context are combined and becomes silapppathikaram. The story off silambu is there fore called silapppathikaram. It is called the citizens epic because it was sing by erdirary pettle like kovalan and kannaki. It is the book that makes the life of the people very clear. Individuality, family, Relative, Community membership, Citizen ship are biological sites and characteristics that human beings Read to protect, Fasks to performand the norms by which an ordinary man an live in everyday life. The integrity of the political life, the rise of temininty, the belief in mortality are the high principles of the tamil people, silapppathikaram explains these, It persuades moral principles through fiction. In this way. It is considered to be the study of the biological norms of the people's through the disciplince life.

**Keywords**

Silapppathikaram, elanfovaladikal,Kannaki, biological,Moral, principal's, mortality

**ஆய்வு சுருக்கம்**

இளங்கோவடிகளால் எழுதப்பட்ட காவியம் சிலப்பதிகாரமாகும். சிலம்பு மற்றும் அதிகாரம் இணைந்து சிலப்பதிகாரமானது. சிலம்பினால் உண்டான கதை ஆதலால் சிலப்பதிகாரம் என பெயர் பெற்றது. கோவலன் கண்ணகி போன்ற சாதாரண மனிதர்களை வைத்து பாடுபட்டதால் இது குடிமக்கள் காவியம் என அழைக்கப்படுகிறது. நாட்டுமக்கள் வாழ்வியலை தெள்ளத் தெளிவாக தருவது இந்நூல் ஆகும். தனிமனித நிலை குடும்பநிலை, உறவினர்நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்கள் வாழ்வியலாகவும், மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள், சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய வழிமுறைகள், வாழ்வியல் நெறிகளாகவும் உள்ளன. அரசியல் வாழ்வில் இருந்த சீர்மை, பெண்மையின் உயர்வு, அறத்தின் பால், நம்பிக்கை இம்மூன்றும் தமிழ் மக்களின் உயர்ந்த கோட்பாடுகள் கதை பாத்திரங்கள் வாயிலாக அறக்கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகிறது. இவ்வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்து காட்டுவதை ஆய்வதாக இவ்வாய்வு அமையப்பெறுகிறது.

திறவுச்சொல்

சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கண்ணகி, ஒழுக்க நெறி, நீதிநெறி, வாழ்வியல்.

## சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் அறங்கள்

இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் பிரதிபலிப்பன. மனிதர்களின் வாழ்க்கை இலக்கியங்களில் பதிவு செய்யப் பெறுகின்றது. சிலப்பதிகாரம் முதன்முதலாக எழுந்தக் காப்பியம். இக்காப்பிய இலக்கியத்தில் வாழ்க்கையைப் பற்றியும், வாழ்க்கை அறங்கள் பற்றியும் சுவைபட காட்சி

அடிப்படையில் படைக்கப் பெற்றுள்ளன. கண்ணகி, கோவலன் போன்ற தலைமைப் பாத்திரங்களின் வழியாகவும், ஐயை , மாதிரி போன்ற துணைப் பாத்திரங்களின் வழியாகவும் பற்பல வாழ்வியல் அறங்கள் எடுத்துக்காட்டாக பெறுகின்றன.

## வாழ்வியல் அறம்:

வாழ்க்கையை இல்லறம், துறவறம் என்று இருவகைப் படுத்திக் கொள்ளலாம். அன்பும் அறனும் உடையது இல்வாழ்க்கை அதனால் பண்பும் பயனும் பெறத்தக்கதாக உள்ளது. துறவு வாழ்க்கை என்பது பற்றற்றான் பற்றினைப் பற்ற அனைத்துப் பற்றுகளையும் விட்டு விடுவது ஆகும். இவ்வாழ்க்கை சிறந்ததா, துறவு வாழ்க்கை சிறந்ததா என்ற அறிவதை விட அவரவர் எடுத்துக் கொண்ட வாழ்க்கை எவ்வாறு சிறப்புடன் அமைத்துக் கொள்வது அவ்வாழ்க்கையில் அறங்களைக் கடைப்பிடிப்பதே முன்னேற்றமுடைய பாதையாகும். அம்முன்னேற்ற பாதையை சிலப்பதிகாரத்தின் மூலம் வடிவமைத்துக் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

## கண்ணகி சுட்டும் வாழ்வியல் அறம்:

கண்ணகி சிலம்பின் கதைத் தலைவி. இவள் இன்பங்களை விட துன்பங்களையே அதிகமாகப் பெறுகிறாள். அந்நிலையிலும் தன்னிலை மாறாமல் பத்தினித் தெய்வமாக உயருகிறாள். கணவன் கோவலன் தன்னை விட்டுப் பிரிந்து விட்டான் என்பதற்காகக் கலங்காமல், தன் வாழ்வை இயல்பாக அவள் நடத்துகிறாள். அவ்வாழ்வினைப் பற்றிக் கோவலன் அறியமுற்பட்டபோது தனித்து வாழ்ந்தால் தான் பட்ட துயரங்களை அவள் எடுத்துரைக்கிறாள்.

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்த்தாலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**

**(சிலம்பு, கொலைக்களக்காதை:71-73)**

இந்தப் பாடலில் அமைந்துள்ள இந்நான்கு அறங்களைத் தன்னால் செய்ய இயலவில்லை என்று கண்ணகி கோவலன் பிரிந்த காலத்தில் வருத்தப்பட்டுள்ளாள்.
தனித்து இருக்கின்ற இல்லறப் பெண் அறங்களைச் செய்ய இயலாது. கணவனும் மனைவியும் இணைந்து இல்லறம் பேணுவது என்பதே சிறப்பு.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை.**

**(திருக்குறள்-41)**

என்று திருக்குறள் காட்டும் வாழ்வியல் இலக்கணத்திற்குச் சிலப்பதிகாரத்தின் இக்காட்சி இலக்கியமாக அமைந்திருக்கின்றது.

## அரசியல் பிழை செய்தவர்களுக்கு அறமே யமன்:

கொலை செய்யப்பட்ட கோவலனின் செய்தியைக் கேட்ட கண்ணகி வீறு கொண்டு நீதி கேட்டு அரசை சபைக்குச் சென்றாள். பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியுடைய சிலம்பு, அரசியின் காற்சிலம்பு முத்துக்கள் எனக் கூறுவதை விட, தன்னுடைய மாணிக்கப் பரல்கள்

கொண்டது என்பதை தனது வாதத்தின் மூலம் நிரூபித்தாள். அரசன் தனது அவசரமான முந்தைய தீர்ப்பு தவறு என்பதை உணர்ந்து உடனே தன் உயிர் துறந்து அறத்தை நிலை நிறுத்தினான்.

## வாழ்வினை உருந்து வந்து ஊட்டும்:

கோவலனைப் பார்த்து மாடலன் என்பவன்,

**இம்மைச் செய்தன யானறி நல்வினை**
**உம்மை பயன் கொல்.**

**(அடைக்கலக்காதை:90-94)**

பெருமையாகக் கூறினான். நான் பார்த்த வரையில் நீ நன்மையைத்தான் செய்திருக்கிறாய். ஆனால் ஒருவேளை முற்பிறவியில் செய்த பயனாக இருக்கும் எனக் கேட்கிறான். அதாவது ஊழ்வினைப் பயனை அனுபவித்தே தீர வேண்டும் அப்பயனே அவன் இப்பிறப்பில் கொலை செய்யப்படக் காரணம் என்பதே இதன் தாத்பர்யமாக அமைந்துள்ளது.

## கவுந்தியடிகள் வடக்கிருத்தல்:

கவுந்தியடிகள் துறவியாக இருந்தாலும் கோவலன் கண்ணகி இருவர் மீதும் மாறாப் பற்று வைத்திருந்தார். அவர்களின் பிரிவினால் பெரிதும் மனத்துயர் அடைந்து உயிர் விட்டதை சிலப்பதிகாரம் மூலம் அறிய முடிகிறது.

சோழனின் பிரிவை தாங்காமல் அவரது நண்பர் பிசிராந்தையார் மற்றும் பொத்தியாரும் வடத்திருந்து உயிர் விட்டதைப் போல இது அமைந்துள்ளது.

இதையே சிறுபஞ்சமூலம்,

**"வலியழிந்தார் மூத்தார் வடக்கிருந்தார் நோயின்**
**நலிபழிந்தார் நாட்டரை போய்**
**நைந்தார்"**

**(சிறுபஞ்சமூலம்-பாடல்-71)**

வடக்கிருத்தல் என்னும் செய்தியைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

## சிலம்பில் மானுடவியல் கோட்பாடுகள்:

இளங்கோவடிகள் நான்கு வகையான பாத்திரங்களான அந்தணர், அரசர் , வணிகர், வேளாளர் ஆகியோரை அறிமுகப்படுத்துகிறார். மேலும் ஐவகை நிலங்களைப் பிரித்து அதற்குரிய தெய்வங்களையும் மக்கள் வழிபடுவதையும் கூறியுள்ளார்.

**"தேவர் கோமான் ஏவலிற் போந்த**
**காவற் பூதத்துக் கடைகெழு பீடிமை"**

**(இந்திரவிழா உளரெடுத்த காதை:66-67)**

என்ற வரிகள் மூலம் காவல் தெய்வ வழிபாடு உள்ளதைக் காண முடிகிறது.

## முடிவுரை:

இளங்கோவடிகள் காப்பியத்தை நிறைவு செய்யும் முன்னர்,

**பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்**
**அறமனை காமின் அல்லவை கடிமின்**

**கள்ளுங் களவும் காமமும் பொய்யும்**
**வெள்ளைக் கோட்டியும் விரிக்கினில் ஒளிமின்**
**இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா**
**உளநாள் வரையாது ஒல்லுவது ஒளியாது**
**செல்லும் தேஎத்து உறுதுணை தேடுமின்**
**மல்லன் மாஞாலத்து வாழ்வீர் ஈங்கென்**

**(வரந்தருகாதை:195-202)**

இவ்வாழ்வியல் அறங்களை குறிப்பிடுகிறார். இதனை கடைப்பிடித்து வாழ சிலப்பதிகாரம் வலியுறுத்துகிறது.

**துணைநின்ற நூல்கள்:**

1. சிலப்பதிகாரம்-அரும்பதவுரை- அடியார்க்கு நல்லாருரை, டாக்டர். வே. சாமிநாதையர், கபீர் அச்சுக்கூடம், சென்னை.

2. சிலம்பின் கதை-டாக்டர். ரா. சீனிவாசன், வெளியீடு- Mukile Publishing Pvt Ltd.